அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – 2006-07, 2007-08 மற்றும் 2008-09–ஆம் ஆண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராம ஊராட்சிகளில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 அன்று விளையாட்டு போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்குவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அதி1) துறை**

**அரசு ஆணை (நிலை) எண்.73** **நாள்: 28.07.2009.**

படிக்கப்பட்டவை:

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதம் எண்.49261/09/AGAMT–2,
நாள் 22.7.2009.

------

**ஆணை**:

சட்டமன்றப் பேரவையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் மான்யக் கோரிக்கையின் போது 29.06.2009 ஆம் நாளன்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் ஏனையவற்றிக்கிடையே கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டார்.

> ‘‘2006-07, 2007-08 மற்றும் 2008-09–ஆம் ஆண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட ஊராட்சிகளில் சுமார் 8,000 பள்ளி மற்றும் சமுதாய விளையாட்டு மையங்கள் அமைத்து பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வூராட்சிகளில் உள்ள இளைஞர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கும் நோக்கில் அரசின் புதிய முயற்சியாக இந்த ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 அன்று ஊராட்சி அளவில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்படும். இதற்காக, 2009-10ம் ஆண்டில் சுமார் 8 கோடி ரூபாய் செலவு செய்யப்படும்.’’

2. மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் 2006-07, 2007-08 மற்றும் 2008-09–ஆம் ஆண்டுகளுக்கான அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட ஊராட்சிகளில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 அன்று ஊரக விளையாட்டுப் போட்டிகள் நடத்தி பரிசு வழங்குவதற்கு கடைபிடிக்க வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகளை அரசுக்கு அனுப்பி உள்ளார். மேலும் ஒரு கிராம ஊராட்சியில் விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கான மொத்த செலவினம் ரூ.10,000/–க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்றும் இத்தொகை கிராம ஊராட்சி நிதி கணக்கிலிருந்து செலவிடப்படுதல் வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். 7594 ஊராட்சிகளிலும் விளையாட்டுப் போட்டிகள் நடத்திட உத்தேசமாக ரூ.7.594 கோடி தேவைப்படும். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் வரைவு வழிகாட்டு நெறிமுறைகளுக்கும், கிராம ஊராட்சி நிதி கணக்கிலிருந்து செலவு செய்யவும் அரசின் ஒப்புதலை கோரி உள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் செயற்குறிப்புகளை அரசு கவனமாகப் பரிசீலித்து, ஏற்றுக் கொள்ள முடிவு செய்துள்ளது. அதன்படி 2006-07, 2007-08 மற்றும் 2008-09–ஆம் ஆண்டுகளுக்கான 7594 அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட ஊராட்சிகளில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 அன்று இந்த அரசாணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள ஊரக விளையாட்டுப் போட்டிகளுக்கான வழிகாட்டு நெறிமுறைகளை கடைபிடித்து ஊரக விளையாட்டுப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்குவதற்கும், இதற்கு தேவைப்படும் தொகையை ஒரு கிராம ஊராட்சிக்கு ரூ.10,000/–க்கு (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) மிகாமல் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சி நிதிக் கணக்கிலிருந்து செலவிடுவதற்கும் அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

**4.** இந்த ஆணை நிதித்துறையின் அ.சா. எண்.**2042**/FS/P/2009 நாள் **27.7.2009**–ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**நிரஞ்சன் மார்டி,**
அரசு செயலாளர் (பொறுப்பு)

**muR Miz (ãiy) v©.73, C.t.(k) C. (kh.m.Â1) Jiw, ehŸ 28.7.09.**

**Ïiz¥ò**

**Cuf éisah£L¥ ngh£ofS¡fhd têfh£L be¿KiwfŸ**

**1. முன்னுரை:**

**1.1** கிராமப்புறங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் கடந்த 2006–07–ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. பள்ளி அல்லது சமுதாய விளையாட்டு மையங்கள் அமைப்பது இத்திட்டத்தின் மிக முக்கிய அம்சமாகும். கடந்த 2006–07, 2007–08 மற்றும் 2008–09 ஆகிய ஆண்டுகளில் 6,180 சமுதாய விளையாட்டு மையங்களும், 1,414 பள்ளி விளையாட்டு மையங்களும் நிறுவப்பட்டுள்ளன. 2009–10 மற்றும் 2010–11 ஆகிய ஆண்டுகளில் மேலும் 5024 விளையாட்டு மையங்கள் நிறுவப்படவுள்ளன.

**1.2** அண்ணா மறுமலர்ச்சித் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின் அடிப்படையில் பள்ளி மற்றும் சமுதாய விளையாட்டு மையங்களில் பின்வரும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

**அட்டவணை 1: பள்ளி மற்றும் சமுதாய விளையாட்டு மையங்களுக்கான வசதிகள்**

| பள்ளி விளையாட்டு மையங்கள் | சமுதாய விளையாட்டு மையங்கள் |
|---|---|
| 1. | 2. |
| 1. ஒரு கைப்பந்து மைதானம் (Volley Ball) தேவையான அனைத்து உபகரணங்களுடன்<br><br>2. ஒரு பூப்பந்து மைதானம் (Ball Badminton) தேவையான அனைத்து உபகரணங்களுடன்<br><br>3. ஒரு வலைப்பந்து (Tennicoit) மைதானம் பெண்களுக்கானது தேவையான அனைத்து உபகரணங்களுடன்<br><br>4. கிரிக்கெட் விளையாட்டுப் பொருட்கள், தரை விரிப்பு மற்றும் பயிற்சி வலை<br><br>5. கால்பந்து (Foot Ball) மற்றும் ஹாக்கி(Hockey) கோல் கம்பங்கள் தேவையான சாதனங்கள் மற்றும் இதர உபகரணங்களுடன்<br><br>6. கூடைப் பந்து (Basket Ball) மைதானம் தேவையான அனைத்து உபகரணங்களுடன், தரைத் தளமே போதுமானது, கான்கிரீட் தரைத் தளம் அமைக்கத் தேவையில்லை. | 1. ஒரு கைப்பந்து மைதானம் (Volley Ball) தேவையான அனைத்து உபகரணங்களுடன்<br><br>2. ஒரு பூப்பந்து மைதானம் (Ball Badminton) தேவையான அனைத்து உபகரணங்களுடன்<br><br>3. ஒரு வலைப்பந்து (Tennicoit) மைதானம் பெண்களுக்கானது தேவையான அனைத்து உபகரணங்களுடன்<br><br>4. நீளம் தாண்டுதல் மற்றும் உயரம் தாண்டுதலுக்கான மணற் குழி தேவையான உபகரணங்களுடன்<br><br>5. மேலுந்து கம்பங்கள்(Pull up Bars), இணைக் கம்பங்கள்(Parallel Bars), கைப் பிடிக் குண்டுகள் (Dumb Bells), பெஞ்ச் பிரஸ் (Bench Press), பலகை மற்றும் பளு தூக்கும் கருவிகள்(Multiple sets of weight).<br>6. சதுரங்கப் பலகை (Chess Board) |

| | |
|---|---|
| 7. டேபிள் டென்னிஸ் மேஜை மற்றும் தேவையான இதர உபகரணங்களுடன்.<br><br>8. நீளம் தாண்டுதல் மற்றும் உயரம் தாண்டுதலுக்கான மணற் குழி தேவையான உபகரணங்களுடன்<br><br>9. மேலுந்து கம்பங்கள் (Pull up Bars), இணைக் கம்பங்கள்(Parallel Bars), கைப்பிடிக் குண்டுகள்(Dumb Bells), பெஞ்ச் பிரஸ் (Bench Press), பலகை மற்றும் பளு தூக்கும் கருவிகள்(Multiple sets of weight).<br><br>10. சதுரங்கப் பலகை (Chess Board) மற்றும் கேரம் பலகை (Carrom Board) (4 Sets each)<br><br>11. ஈட்டி எறிதல் (Javelin), வட்டு எறிதல் (Discuss), குண்டு எறிதல் (Shot Put) | மற்றும் கேரம் பலகை(Carrom Board) (4 Sets each)<br><br>7. சிறுவர்/சிறுமிகளுக்கான ஏற்ற இறக்க பலகை(See-Saw), சறுக்கு (Slides) மற்றும் ஊஞ்சல் (Swings) (2 sets each per village) |

**1.3** ஊரகப் பகுதிகளிலுள்ள விளையாட்டுத் திறன்மிக்க இளையோர்களை ஊக்குவிக்கும் முகத்தான், 2006–07, 2007–08 மற்றும் 2008–09–ஆம் ஆண்டிற்கான அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராம ஊராட்சிகளில் பேரறிஞர் அண்ணா பிறந்த தினமான செப்டம்பர் 15 அன்று விளையாட்டுப் போட்டிகள் நடத்தி பரிசு வழங்கப்படும் என மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார். இப்போட்டிகள் இனி ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து நடத்தப்படும். ஊரக விளையாட்டுப் போட்டிகள் நடத்தும்போது கீழ்க்கண்ட வழிகாட்டு நெறிமுறைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும்:

**2. ஊரக விளையாட்டுப் போட்டிகளுக்கான வழிகாட்டிகள் – செப்டம்பர் 15, 2009**

**2.1** போட்டியில் பங்கேற்கும் போட்டியாளர்கள் வயதின் அடிப்படையில் மூன்று பிரிவுகளாக முறையே, சப்ஜுனியர், ஜுனியர், சீனியர் எனவும், ஒவ்வொரு பிரிவிலும் ஆடவர் மற்றும் மகளிர் என தனித்தனியாக வகைப்படுத்தப்படும். இதன்படி கீழ்க்கண்டவாறு 6 பிரிவுகளாக வகைப்படுத்தப்படும்.

**அட்டவணை 2: <u>விளையாட்டு வீரர்களின் வகைப்பாடு</u>:**

| வ.எண் | வகை | வயது |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1. | சப்–ஜூனியர்–சிறுவர் | 10 வருடம் அதற்கும் குறைந்த |
| 2. | சப்–ஜூனியர்–சிறுமியர் | |
| 3. | ஜூனியர்–ஆடவர் | 10 வருடங்களுக்கு மேல் 18 வயது வரை |
| 4. | ஜூனியர்–மகளிர் | |
| 4. | சீனியர் – ஆடவர் | 18 வருடங்களுக்கு மேல் |
| 6. | சீனியர்–மகளிர் | |

**2. 2 <u>விளையாட்டு வகைகள்</u>**:

தனி நபர் மற்றும் குழுக்களுக்கான விளையாட்டுகள் அனைத்து வகையான வீரர்களுக்கும் வயது தொகுப்பு மற்றும் பாலின அடிப்படையிலும் நடத்திடலாம்.

இதன் விவரம் பின் வருமாறு:

அ. **<u>தனி நபர்களுக்கான விளையாட்டுகள்:</u>**

தனி நபர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் கீழ்க்கண்டவாறு நடத்தப்படலாம்.

**அட்டவணை 3: <u>தனி நபர்களுக்கான விளையாட்டுகள்</u>:**

| வ.எண் | விளையாட்டு | வீரர்களின் வகைப்பாடு |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1. | நீளம் தாண்டுதல் | i) ஜூனியர் – ஆடவர்<br>ii) சீனியர் – ஆடவர்<br>iii) ஜூனியர் – மகளிர்<br>iv) சீனியர் – மகளிர் |
| 2. | உயரம் தாண்டுதல் | i) ஜூனியர் – ஆடவர்<br>ii) சீனியர் – ஆடவர்<br>iii) ஜூனியர் – மகளிர்<br>iv) சீனியர் – மகளிர் |
| 3. | சதுரங்கம் | அனைத்து 6 வகைப்பாடுகளுக்கும் |
| 4. | கேரம் | அனைத்து 6 வகைப்பாடுகளுக்கும் |
| 5. | 100 மீட்டர் ஓட்டப் பந்தயம் | அனைத்து 6 வகைப்பாடுகளுக்கும் |

ஆ. **<u>குழுக்களுக்கான விளையாட்டுப் போட்டிகள்</u>**:

குழுக்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் கீழ்க்கண்டவாறு நடத்தப்படலாம்.

**அட்டவணை 4 குழுக்களுக்கான விளையாட்டுகள்:**

| வ.எண் | விளையாட்டு | வீரர்களின் வகைப்பாடு |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1. | கைப்பந்து | சீனியர் –ஆடவர் |
| 2. | டென்னிகாய்ட் | i) ஜுனியர் – மகளிர்<br>ii) சீனியர் – மகளிர் |

### 2.3 ngh£ofŸ eilbgW« Ïl«:

விளையாட்டுப்போட்டிகள் யாவும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள சமுதாய விளையாட்டு மையங்களில் நடைபெறும். எங்கெங்கு பள்ளி விளையாட்டு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதோ அங்கு பள்ளி வளாகத்திலேயே நடைபெறும்.

### 2.4 பரிசு (Prizes) வழங்குதல்:

2.4.1 தனி நபர் மற்றும் குழுக்களுக்கான முதல் மற்றும் இரண்டாவது பரிசுகள் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு வழங்கப்படும். அதன் மதிப்பு கீழ்க்கண்டவாறு:தனி நபர்களுக்கானது

i) முதல் பரிசு ரூ.100/–

ii) இரண்டாம் பரிசு ரூ. 75/–

குழுக்களுக்கானது

i) முதல் பரிசு ரூ.300/–

ii) இரண்டாம் பரிசு ரூ.200/–

### 2.5 விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்குப் பின்பற்றப்பட வேண்டிய முறைகள்:

**செயல்பாடு : 1. கிராம ஊராட்சியின் சிறப்புக் கூட்டம் கூட்டுதல்.**

- சிறப்பு கிராம ஊராட்சிக் கூட்டம், போட்டிகள் நடைபெறும் 15 தினங்களுக்கு முன்னதாக (அதாவது செப்டம்பர் 1–க்கு முன்) ஊராட்சித் தலைவரால் கூட்டப்பட வேண்டும். அதில் போட்டிகள் நடத்த மேற்கொள்ளப்பட வேண்டிய செயல் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.
- மேற்படி சிறப்பு கிராம ஊராட்சிக் கூட்டத்திற்கு கீழ்க்கண்ட நபர்களை சிறப்பு விருந்தனர்களாக அழைக்கலாம்.
    - சம்பந்தப்பட்ட மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள்

- உள்ளூர் பள்ளி ஆசிரியர்கள்.
- நேரு யுவ கேந்திரா தன்னார்வத் தொண்டர்கள்.
- இளைஞர் குழு உறுப்பினர்கள்.
- சுய உதவிக் குழு உறுப்பினர்கள்.

- விளையாட்டுப் போட்டிகள் நடத்துவது குறித்த ஒரு விரிவான செயல் திட்டம் தெரிவிக்கப்படுவதுடன், செயல் திட்டம் குறித்த தீர்மானமும் கிராம ஊராட்சியால் இயற்றப்பட வேண்டும்.
- செயல்திட்டம் கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

i) ஒவ்வொரு வகையான விளையாட்டுக்கும் "முன்னோடிப் போட்டிகள்" நடத்தப்பட்டு இறுதிப் போட்டியாளர்கள் தேர்வு செய்யப்படுவதற்கான கால அட்டவணை.

ii) செப்டம்பர் 15ம் தேதி அன்று நடத்தப்பட இருக்கும் இறுதிப் போட்டிக்கான கால அட்டவணை.

**<u>செயல்பாடு : 2 விளம்பரம்:</u>**

- போட்டிகள் நடத்தப்படும் விவரம், சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சியில் டாம்–டாம், துண்டுப் பிரசுரங்கள் மற்றும் சுவரொட்டி போன்றவை மூலமாக, பரவலான விளம்பரங்கள் செய்யப்பட வேண்டும்.
- இதுகுறித்து கிராம சபை கூட்டம் நடைபெறும் ஆகஸ்ட் 15–ம் தேதி அந்தந்த ஊராட்சியின் விவாதக் கூட்டப் பொருளாக வைத்து விவாதிக்கப்பட வேண்டும்.
- 2006–07, 2007–08 மற்றும் 2008–09 ஆகிய ஆண்டுகளுக்கான அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமங்களில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுவது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்திடும் முகத்தான் பத்திரிகைச் செய்திகள் மாவட்ட ஆட்சித் தலைவரால் வெளியிடப்பட வேண்டும்.

**செயல்பாடு : 3 <u>செப்டம்பர் 15ல் விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல்.</u>**

- போட்டிகள் நடத்தும் ஆடுகளம், உள்ளூர் தன்னார்வத் தொண்டர்கள், பணியில் உள்ள மற்றும் ஓய்வு பெற்ற உடற்பயிற்சி ஆசிரியர்கள் உதவியுடன் தயார் செய்யப்பட வேண்டும்.

- ஒலிபெருக்கி வசதி, குறியீடு செய்வதற்கான சுண்ணாம்பு, ஊதுகுழல், சான்றிதழ்கள் அச்சடித்தல் போன்ற இனங்களுக்கான செலவினம் ஒரு ஊராட்சிக்கு தலா ரூ.3,950/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

- ஊராட்சிக்கு உட்பட்ட அனைத்து உட்கடை கிராமங்களில் வசிப்பவர்களும் குறிப்பாக ஆதி திராவிடர் (ம) தாழ்த்தப்பட்ட குடியிருப்புகளில் உள்ள விளையாட்டு வீரர்களும் பங்கு பெறுவதை உறுதி செய்திடல் வேண்டும்.

- குழுக்களுக்கான போட்டிகளில், கூடுமான வரையில், ஒரே குழுவில் ஒரே சமூகத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் பங்கேற்பது தவிர்க்கப்பட்டு வெவ்வேறு சமூகத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் அடங்கிய குழுக்கள் ஊக்குவிக்கப்படல் வேண்டும்.
- இறுதி போட்டிகள் முடிவுற்ற உடன் பரிசு அளிப்பு விழா செப்டம்பர் 15ம் தேதி அன்றே நடைபெற வேண்டும்.

**2.6 <u>ஒரு கிராம ஊராட்சிக்கான உத்தேச செலவினம்:</u>**

**2.6. 1** தனி நபர் மற்றும் குழுக்களுக்கான பரிசுகளின் அடிப்படையில் ஒரு கிராம ஊராட்சிக்கான உத்தேச செலவினம் பின்வருமாறு:

**அட்டவணை 5: விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கான ஒரு கிராம ஊராட்சிக்கான உத்தேச செலவினம்**

| வ.எண். | விளையாட்டு | வகைகள் | தொகை விவரம் | | |
|---|---|---|---|---|---|
| | | | முதல் பரிசு | இரண்டாம் பரிசு | மொத்தம் |
| **தனி விளையாட்டுகள்** | | | | | |
| 1. | நீளம் தாண்டுதல் | 4 | ரூ.400/- | ரூ.300/- | ரூ.700/- |
| 2. | உயரம் தாண்டுதல் | 4 | ரூ.400/- | ரூ.300/- | ரூ.700/- |
| 3. | சதுரங்கம் | 6 | ரூ.600/- | ரூ..450/- | ரூ..1,050/- |
| 4. | கேரம்போர்டு | 6 | ரூ.600/- | ரூ..450/- | ரூ..1,050/- |
| 5. | 100 மீ. ஓட்டப் பந்தயம் | 6 | ரூ.600/– | ரூ..450/- | ரூ.1,050/– |
| | சிறு மொத்தம் | 26 | ரூ2,600/- | ரூ.1950/- | ரூ4,550/- |
| **குழுக்களுக்கானது** | | | | | |
| 6. | கைப்பந்து | 1 | ரூ.300/- | ரூ.200/- | ரூ.500/- |
| 7. | டென்னிகாய்ட் | 2 | ரூ.600/- | ரூ.400/- | ரூ.1,000/- |
| | சிறு மொத்தம் | 3 | ரூ.900/- | ரூ.600/- | ரூ.1,500/- |
| 8. | விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கும் ஏற்பாடுகளுக்குமான செலவினங்கள்(உத்தேசமாக) | | | | ரூ..3,950/- |
| | **பெரு மொத்தம்** | | | | **ரூ.10,000/-** |

**2.6.2** ஒரு கிராம ஊராட்சியில் விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கான மொத்த செலவினம் மேற்குறிப்பிட்டவாறு ரூ. **10,000/–க்கு** மிகாமல் இருத்தல் வேண்டும். இந்தச் செலவினம் கிராம ஊராட்சி நிதிக் கணக்கிலிருந்து செலவிடப்படுதல் வேண்டும்.

**2.6.3** **7,594** ஊராட்சிகளிலும் விளையாட்டுப் போட்டிகள் நடத்திட தேவைப்படும் உத்தேச செலவினம் 7,594 x ரூ.10,000/- = ரூ.**7.594** கோடி ஆகும்.

**3.** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையருடன் கலந்தாலோசித்து, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கான மேற்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளில், எதிர்காலத்தில் ஏற்படும் சூழ்நிலை மாற்றங்களைக் கருத்தில் கொண்டு, தேவையான மாற்றங்களை செய்ய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, அரசு முதன்மை செயலாளருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

**நிரஞ்சன் மார்டி,**
அரசு செயலாளர் (பொறுப்பு)